கல்வி ஆண்டு 1986
பிரிவு III
O/L 9-ம் வகுப்புகள்
ஆரம்பம்:
23 - 12 - 85
காலை 8-00 மணி
நிரு டியூசன்
சென்டர்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
கிளை:-
குளப்பிட்டி லேன்,
கொக்குவில்.

இதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

A/L 86
மீடல் வினு விடை வகுப்பு
கலை, வர்த்தகம், விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம்: 23 - 12 - 85
காலை 8-00 மணி
NIRU
TUITION CENTRE
Station Road, JAFFNA.
Branch: Kulapiddy Lane, KOKUVIL.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ மார்கழி மீ 07 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 09 (22-12-1985) UTHAYAN –A LIVELY TAMIL DAILY கதிர்:- 26

குடாநாட்டில் பரந்த அளவில் நேற்று விமானத் தாக்குதல்

எப்போது, எங்கு சூடு விழும் என அஞ்சி கிராமம் தோறும் மக்கள் பதற்றம்

சுதுமலைச் "சமர்" 4 மணி நேரம் நீடித்தது

துப்பாக்கி, குண்டு, லோஞ்சர் வேட்டுச் சத்தங்கள் முழங்கின

—அலுவலகச் செய்தியாளர்: வனிராஜன்—

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றுச் சனிக்கிழமை காலை பரந்த அளவில் பல இடங்களில் ஹெலிக்கொப்டர் விமானத்திலிருந்து சுடப்பட்டது. சுதுமலை, மானிப்பாய், சங்குவேலி, தாவடி, உடுவில், இணுவில், கொக்குவில் ஆகிய பகுதிகளில் விமானத் தாக்குதல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அந்தக் கிராமங்களில் பெரும் பதற்றம் நிலவியது.

விமானத்திலிருந்து சுடப்பட்டதைக் கேள்வியுற்ற மக்கள் எங்கு எப்போது தேடுதலும், சூடும் நடக்குமோ என அஞ்சியதால் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு பகுதிகளில் உள்ள கிராமங்கள் தோறும் மக்கள் பதற்றம் அடைந்தனர்.

அதனால் அப்பகுதிகளில் போக்குவரத்து ஸ்தம்பித்து, சன நடமாட்டம் குறைந்து, வழமையான அலுவல்கள் தடைப்பட்டன.

சுதுமலையில் ஆயுதப்படையினருக்கும், போராளிகளுக்கும் இடையில் நடந்த "சமர்" சுமார் நான்கு மணி நேரம் நீடித்தது.

துப்பாக்கிகள், குண்டுகள், ரொக்கெட் 'லோஞ்சர்கள்' என்பனவற்றின் வேட்டுச் சத்தங்கள் சுதுமலையையும் அதன் அயல் கிராமங்களையும் தொடர்ந்து 4 மணித்தியாலங்களாகக் கலக்கின.

இச்சம்பவத்தின் விபரவாக ஒன்பது வயதுச் சிறுவன் உட்பட இரண்டு பேர் மரணமானார்கள் நான்கு பெண்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் குறித்து அறியப்படுவதாவது :

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் 4 ஹெலிக் கொப்டர்களில் சுமார் 40 ஆயுதப்படை வீரர்கள் உடுவில் ஈச்சடித் தோட்டத்தில் போய் இறங்கினர்.

அங்கு இருந்த மரவள்ளித் தோட்டங்கள், வாழைத் தோட்டங்களுக்குள் பதுங்கி இருந்த படையினர், பின்னர் நடந்து தேடுதல் பணியில் ஈடுபடத் தொடங்கினர்.

சில வீடுகளிலும் தேடுதல் நடத்தத் தொடங்கினர்.

தேடுதல் நடந்துகொண்டு இருந்த சமயம் துப்பாக்கிச் சூடுகள் இருபக்கங்களில் இருந்தும் கிளம்பின.

துப்பாக்கிச் சூடுகள், குண்டு வெடிப்புச் சத்தங்கள், ரொக்கெட் லோஞ்சரில் இருந்து குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் எல்லாம் நான்கு மணிநேரம் தியாலங்களாக முழங்கின.

சுற்றி வளைத்தனர்

இதன் மத்தியிலும் படையினர் ஒரு வீட்டைச் சுற்றி வளைத்தனர்.

அந்த வீட்டுக்குள் நித்திரையில் இருந்த ஒரு இளைஞன் தட்டி எழுப்பி விரித்தனர். அந்த இளைஞனின் பெற்றோரை ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டு, இளைஞனை வெளியே அழைத்துச் செல்ல முயற்சிக்கையில் பெற்றோர் கூக்குரல் இடத்தொடங்கினர்.

படையினரின் தலைவர் போன்ற ஒருவர், நாங்கள் ஒன்றும் செய்ய மாட்டோம் என்று கூறிய வண்ணம் இளைஞனை அழைத்துக்கொண்டு சென்றார்.

இளைஞனின் பெயர் நல்லையா ஜெகதீஸ்வரன், வயது 20, குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை.

அச்சமயத்தில் புகையிலைத் தோட்டத்தில் குழைகளுப்போட்டுவிட்டு வந்து கொண்டிருந்த வில்லலிங்கம் பாலராத் தினம் என்பவரையும் படையினர் அழைத்துச் சென்றனர். இவர் ஒரு விவசாயி ஒரு குழந்தையின் தந்தை வயது 36.

இதன்பின்னர் ஒரு சில வீடுகளைப் படையினர் சோதனை இட்டனர்.

ஒரு பக்கம் படையினரின் தேடுதல். இன்னொரு பக்கத்தில் இருந்து துப்பாக்கி குடுகள், ரொக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

ஹெலிக்கொப்டர் வானைத் துரத்தியது

யாழ்ப்பாணம், டிச 22

சுதுமலைச்'சமர்' நடந்து கொண்டு இருக்கையில் ஹெலிக்கொப்டர் ஒன்று காங்கேசன்துறை வீதியால் வந்து கொண்டு இருந்த வான் ஒன்றைத் துரத்திக் கொண்டு வந்தது.

தட்டாரத்தெருச் சந்திக்கு வந்ததும் வான் மறைந்து விட்டது.

வித்தாரம்

(4–ஆம் பக்கத்தில்)

தேசிய இணக்க சபை அமைச்சரவை குழு அந்தஸ்து பெறுது

கொழும்பு, டிச. 22

தேசிய இணக்க சபை, அதிக சக்தி வாய்ந்த அமைச்சரவைக் குழு அந்தஸ்தைப் பெறமாட்டாது.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா, அமைச்சர் தொண்டமானிடம் நேரடியாகக் கூறிவிட்டார்.

இனங்களுக்கு இடையே ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கக் கூடிய தாக தேசிய இணக்க சபை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பது அமைச்சர் தொண்டமான் ஆறு மாதங்களுக்கு முன்னர் இருந்து விடுத்து வரும் ஒரு கோரிக்கை.

தமிழகம் செல்லும் முன்னர் அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைப் பல தடவை சந்தித்துப் பேசியதும் குறிப்பிடத்தக்கது.

அந்தப் பேச்சுக்களின் போதும் தேசிய இணக்க சபை ஒன்றை நிறுவதல் பற்றியும் அமைச்சர், ஜனாதிபதியிடம் வற்புறுத்தினர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா, திரு. தொண்டமானின் கோரிக்கையைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டார்.

ஆனால் திரு. ஜெயவர்த்தனா, அப்படி அந்த தேசிய இணக்க சபை வெறும் ஆலோசனை கூறும் சபையாக அமையும் என்றும், தேசிய ஒற்றுமையை எப்படி வளர்ப்பது பற்றி அரசுக்கு ஆலோசனைகளை மட்டுமே வழங்கலாம் என்றும் அமைச்சர் தொண்டமானிடம் தெட்டத்தெளிவாகக் கூறிவிட்டார்.

அதிக சக்தி வாய்ந்த அமைச்சரவைக்குமு அந்தஸ்து தேசிய இணக்க சபைக்கு வழங்கப்படமாட்டாது என்றும் திரு. ஜெயவர்த்தனா திரு. தொண்டமானுக்குக் கூறிவிட்டார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்

தமிழர்—சிங்களவர்கள் சேர்ந்து வாழும் நிலை உருவாக வேண்டும்

திருச்சியில் தொண்டமான்

திருச்சி, டிச.21

தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து வாழும் சூழ்நிலையை உருவாக்கிய பின்னர் தான் இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

இப்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான், திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இரண்டு இனங்களும் சேர்ந்து வாழும் சூழ்நிலையை உருவாக்கவே இ. தொ. கா. 1986-ம் ஆண்டை சமாதான ஆண்டாக அனுஷ்டிக்க முடிவு செய்து இருப்பதாகவும் அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார்.

சூட்டுச் சத்தங்கள் கேட்டபோது வீதியால் ஓடினோம்

நல்லூர், டிச.22

சூட்டுச் சத்தங்கள் பரவலாகக் கேட்டபோது நாம் 5 பேர் கொக்குவிலில் இருந்து கேனியடிப் பக்கமாக வீதியால் ஓடினோம். அப்போது மேலிருந்து வந்த குண்டு ஒன்று என்னைத் தாக்கியது.

ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு இலக்காகி யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் எஸ். சர்வேஸ்வரி மேற்கண்டவாறு கூறினர்.

சர்வேஸ்வரி 20 வயது நிரம்பியவர். கொக்குவில் மேற்குவாசி, சகோதரி வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்புகையில் இவரைக் குண்டு தாக்கியது.

ஹெலிக்கொப்டர் சூடு தம்மைத் தாக்கியதும் ஓடமுடியாது அப்படியே மேடு அமர்ந்து விட்டதாக சர்வேஸ்வரி கூறினர்.

இரண்டு, மூன்று ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து சுடுக்கொண்டே சென்றன என்றும் அவர் சொன்னார்.

நெருப்புப் போன்ற ஒரு பொருள் எனது கையை துளைத்தது

நல்லூர், டிச.22

வானத்தில் பறந்து திரிந்த மூன்று ஹெலிக் கொப்டர்களில் இருந்து நெருப்பு நெருப்பாக ஏத்தா சிளம்பியது. நான் பயத்தினால் நடுங்கிக் கொண்டு இருந்தபோது எமது வீட்டு குசினிக்கும் கதவுக்கும் இடையால் வந்த நெருப்பு போன்ற ஒரு பொருள் எனது கையைத் துளைத்தது.

மானிப்பாயைச் சேர்ந்த என். தங்கராணி மேற்கண்டவாறு கூறினர்.

35 வயது நிரம்பிய இவர் ஹெலிக்கொப்டர் சூட்டுக் காயங்களுடன் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

காலை 6 மணி பளவில் நானும் எனது பிள்ளைகளும் வீட்டினுள் இருந்தோம். வானத்தில் பறந்து திரிந்த மூன்று ஹெலிக்கொப்டர்களில் இருந்து நெருப்பு நெருப்பாக ஏத்தா சிளம்பியது. நான் பயத்தினால் நடுங்கிக் கொண்டு இருந்தபோது எமது வீட்டு குசினிக்கும் கதவுக்கும் இடையால் வந்த நெருப்பு போன்ற ஒரு பொருள் எனது கையைத் துளைத்தது. இரத்தம் பீறிட்டோடியது.

சூடு பட்டபின்பும் வெளிக்கிட முடியாத நிலையில் வீட்டுக்குள்ளேயே இருந்தேன். படையினர் போய் விட்டனர் என அறிந்த பின்பே வீதியால் சென்ற ஒரு வாகனத்தில் ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன்.

இப்படி அவர் கூறினர்.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓட்டம்

சுன்னாகம், டிச 22

மானிப்பாய், தாவடி, இணுவில் பகுதிகளில் இராணுவம் நேற்று தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது மருதனாமடம், சுன்னாகம் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

இராணுவத்தினர் நான்கு ஹெலிக்கொப்டர்களில் மானிப்பாய், இணுவில் பகுதியில் வந்திறங்கி சுமார் 4 மணி நேரமாகத் தேடுதல் வேட்டை நடத்திய போது இப்பகுதி மக்கள் சிதறுண்டு வேறு இடங்களை நாடி ஓடினர்.

மருதனாமடம் சந்தைக்கு வந்த விவசாயிகள் தங்கள் விளைபொருள்களுடன் சுன்னாகம் சந்தையை நோக்கி விரைந்தனர். இதனால் மருதனாமடச் சந்தை நேற்று கூடவில்லை. சுன்னாகத்தில் ஹெலிக்கொப்டர்கள் தாழப் பறந்ததால் பதற்றம் நிலவியது.

காங்கேசன் துறை–யாழ்ப்பாணம் வீதியில் வாகனங்கள் ஓடமுடியாததால் 764 இலக்க பாதையூடாக கன்ஞகத்திலிருந்து வாகனங்கள் –டிவி பஸ்கள் சேவை நடத்தின.

இனப் பிரச்சினை என்று ஒன்று இல்லை

யு.என்.பி. மாநாட்டில் ஜே.ஆர்.

கொழும்பு, டிச.22

இலங்கையில் இனப் பிரச்சினை என்றுஒருபிரச்சினை இல்லை. பயங்கரவாதமே இங்குள்ள பெரிய பிரச்சினையாகும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி (யு. என். பி.) யின் நாற்பதாவது வருடாந்த மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்துகையிலேயே திரு. ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு சொன்னார்.

கதகதாச உள்ளக விளையாட்டரங்கில் நடந்த இந்த மாநாட்டுக்குகட்சியின் அவைத்தலைவர் திரு. ஹர்ஷா அபயவர்த்தனா தலைமை வகித்தார்.

அங்கு பேசுகையில் ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:-

இந்த நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகள் எதுவும் பறிக்கப்படவில்லை. இந்த நாட்டின் பிரதம நீதியரசர் பதவி உட்பட பல உயர் பதவிகளை தமிழர்கள் வகிக்கிறார்கள்.

நமது நாட்டின் பயங்கரவாதிகளின் உண்மை நிலையை உலக நாடுகளில் பல புரிந்துள்ளன. அதனால் பயங்கரவாதத்தை ஒழிக்க அவை எமக்கு ஆதரவு நல்கி வருகின்

(4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு நேற்று முற்றுகை

500 பேர் கைதாகினர்

முகமூடி நபர்கள் முன் ஆஜர் செய்யப்பட்ட பின் 40 பேர் மட்டும் தடுத்து வைப்பு

—மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்—

மட்டக்களப்பு, டிச 22

மட்டக்களப்பை நேற்று முற்றுகையிட்ட ஆயுதப்படையினர் 500க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்தனர். இவர்களில் 40 பேரைத் தவிர ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவம் பற்றிய தெரிய வருவதாவது:-

ஆயுதப்படையினர் நேற்று மட்டக்களப்பு நகரம், பஸ் நிலையம், தான்டவன்வெளி, அரசடி, பொதுச் சந்தை ஆகிய இடங்களைத் திடீரென்று சுற்றி வளைத்தனர்.

காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இந்த முற்றுகை நீடித்தது 150க்கு மேற்பட்ட பொலீஸ் அதிரடிப்படையினர் இந்த முற்றுகையை நடத்தினர். 16 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களை அவர்கள் விசாரணைக்காக கல்லடி இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இப்படி அழைத்துச் செல்லப்பட்ட 500 பேர் முகாமுக்குள் முகமூடி அணிந்து காணப்பட்ட ஐந்து பேர் முன்னிலையில் ஒவ்வொருவராக நிறுத்தப்பட்டனர்.

முகமூடி அணிந்தவர்கள் "ஒன்று" என்றும் "இரண்டு" என்றும் "மூன்று" என்றும் சிங்களத்தில் கூறினர் என்று சொல்லப்படுகிறது.

"ஒன்று" என்றால் நீலிர வாரி "இரண்டு" என்றால் சந்தேகநபர் "மூன்று" என்றால் நிரபராதி என்று அர்த்தமாம்.

இந்த தீர்ப்பை அடுத்தே 40 பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனராம்.

லொறி பொருள்களுடன் கடத்தல்

மட்டக்களப்பு, டிச 22

எம்பிலிப்பிட்டியாவில் இருந்து வாழைச்சேனை காதி ஆலைக்கு 40 பைப்புகளை ஏற்றி வந்த லொறி ஆயுதம் தரித்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினால் கடத்திச் செல்லப்பட்டது.

Bata
SHOW ROOM
19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
நத்தார் மலிவு விற்பனை
சில தினங்களுக்கு மட்டுமே!
உங்கள் பாதங்களின் பாத அளவு பாட்டா
விரைந்திடுவீர்!
அதன் வனப்பை தேர்ந்திடுவீர்!!
Bata

சுபநேரம்

22 - 12 - 1985

ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9-25 முதல் 10-55 வரை
ராகுகாலம்:
04-55முதல் 6-25வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சுவாக்க வாழிலைகாதலி விரதம்

உலைக்கு ஆர் புத்தி சொன்னாப்போல் என்னை அவை தாங்கள் பிடிச்சமுயலுக்கு மூண்டு கால், தாங்கள் சொல்லுறதும் செய்யிறதும் தான் சரி எண்டு திக்கிறவை யெல்லே. இதுகள் எல்லாம் எங்கே அவைக்குக் காதில எறிப்போகுது!

அணு ஆயுதத் தடை குறித்து ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை

றேகனிடம் 46 அமெரிக்க செனட்டர்கள் வேண்டுகோள்

வாஷிங்டன், டிச.21

அணு ஆயுதத் தடை குறித்து சோவியத் யூனியனுடன் பேச்சுக்களை நடத்தும்படி அமெரிக்க அதிபர் திரு றேகனை 46 அமெரிக்க செனட்டர்கள் கூட்டாகக் கேட்டுள்ளனர்.

அணு ஆயுத பரிசோதனை, உற்பத்திகளை ஆறு மாத காலத்துக்கு நிறுத்திவைப்பதாகசோவியத் யூனியன் அறிவித்து இருப்பது அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் விஷயத்தில் அந்நாடு உண்மையிலேயே அக்கறை காட்டுவதாக அமைந்துள்ளது. இப்படி திரு. றேகனுக்கு விடுத்த வேண்டுகோளில் 46 அமெரிக்க செனட்டர்களும் கட்டிக் காட்டியுள்ளனர்.

இதனிடையில், விரிவான அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு முட்டுக்கட்டை போடுவதாகவும், முட்டுக்கட்டை போடுவதற்கான முகாந்திரங்களைத் தேடிக்கண்டு பிடிப்பதில் அமைச்சு அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் ரஷ்ய செய்தி ஸ்தாபனமான ''டாஸ்'' குற்றஞ்சாட்டியுள்ளது.

கவியரசு பிறந்த நாள் விழாவில் இவர்கள்

ஏ. வி. எம். நிறுவனத்தினரால் சென்னையில் கொண்டாடப்பட்ட கவியரசு கண்ணதாசனின் 59வது பிறந்த நாள் விழாவில் சொற்பொழிவாற்றியவர்களின் கருத்துக்களில் இருந்து சில:

அமைச்சர் இராமவிரப்பன்:

முதல்வரின் அனுமதியைப் பெற்று கவிஞர் வாழ்ந்த காலையை அவர் பெயரில் அழைக்க ஏற்பாடு செய்யப்படும். காரைக்குடியில் கவிஞர் பெயரில் ஒரு மணி மண்டபமும் நிர்மாணிக்கப்படும்.

கினிசிறி சினிமா

சோ:

தமிழ், கவிஞரிடம் அடிமை வேலை செய்த தென்றே கூறுவேன். கவியரசுப் பிடிக்காதவன் ஒருவன் இருக்கிறான் என்றால் ஒன்று அவன் மூடனாக இருக்க வேண்டும்; இல்லையென்றால் பிடிவாதக்காரனாக இருக்க வேண்டும்.

கவிஞர் நா. காமராசன்

ஒருமுறை கவிஞர், மத்திய அமைச்சர் ஒருவரை சந்திக்கச் சென்றிருக்கிறார். அப்போது அமைச்சரி, கவிஞருடன் வந்த நபரிடம், வெளியே நின்று கொண்டிருந்த கவிஞரைச் சுட்டிக் காட்டி, '' Who is standing outside?'' என்று கேட்டிருக்கிறார். உடனே கவிஞர், ''An ou standing poet is standing outside'' எனக் கூறியிருக்கிறார்.

ஔவை நடராஜன்

எதுவையைப் பற்றி நானும் கவிஞரும் ஒருமுறை உரையாடிக் கொண்டிருந்தோம். நான் ஒரு வரியைச் சொல்கிறேன் அதற்கு நீங்கள் எதுகை தர வேண்டும்'' என்று கவிஞரிடம் கேட்டேன். அவரும் சரி என்றார். நான் ''அண்ணா துரை சிறந்த அறிஞர், என்று சொல்ல, உடனே கவிஞர், இவர் பண்ணுதுறை என்ன துறை'' என்று எதுகை சொன்னார்.

ராதிகாவின் இரண்டாவது கல்யாணம்!

சமூக சீர்திருத்தக் கொள்கைகளில் நாட்டம் உடையவர் ராதிகா. அவரின் கொள்கைக்கு இணங்க இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

இது என்ன திடீரென்று எந்தவித பரபரப்பும் இன்றி ராதிகா இரண்டாம் திருமணம் செய்து கொண்டு விட்டார் என்று யோசிக்கிறீர்களா? பயப்படாதீர்கள். அப்படி ஒன்றுமே விபரீதம் ஏற்பட்டுவிடவில்லை.

''ஸ்வாதி முச்சம்'' என்ற தெலுங்குப் படத்தில் வரும் ராலில் தான் அப்படி ஒரு புரட்சிகர பெண்ணாக நடித்துள்ளார் ராதிகா.

சொந்த வாழ்க்கையில் என்ன நினைத்திருக்கிறாரோ, யாருக்குத் தெரியும்?

தமிழர் பிரச்சினை காங்கிரஸ் மாநாட்டில்

சென்னை, டிச. 21

சம உரிமையுடன் இலங்கைத் தமிழர் வாழ வழி சமைக்க வேண்டும்.

இதுபற்றி பம்பாயில் நடக்க இருக்கும் இந்திரா காங்கிரஸ் நூறாண்டு விழாக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என்று காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டுள்ளார்.

இத்தகவலை திரு. குமரி அனந்தன் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

மின்னேரி காடுகளில் மர்ம வெடிச் சத்தம்

யாழ்ப்பாணம், டிச. 22

மின்னேரிக் காடுகளிலிருந்து மர்ம வெடிச்சத்தங்கள் இரவு நேரங்களில் கேட்கின்றனவாம்.

அயற் கிராமங்களில் வாழும் சிங்கள மக்கள் இந்த மர்ம வெடிச் சத்தங்களினால் பீதிக்குள்ளாகி இருப்பதாக அரச அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டுள்ளது.

ஹெவன் பிட்டிய, கட்டுவன்வெல, மத்துஹெல, கொப்பிஹெல கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்கள் பயப்பிராந்தியுடன் வாழ்கின்றனராம்.

தலைவர் அணிக்கு மீண்டும் வெற்றி

யாழ்ப்பாணம், டிச 22

கட்டைவேலி – நெல்லியடி நோ கூட்டங்களுக்கு குழுத் தேர்தலில் சங்கத்தின் தற்போதைய தலைவர் திரு. சு. தெய்வரப்பிள்ளை அணி அமோக வெற்றி பெறுள்ளது.

இருபத்திரண்டு கிளைகளுக்கான நிர்வாகப் பதவிகளுக்கு நிர்வாகத் தாக்கல் செய்யப்பட்ட போது 14கிளைகளில் கிளைக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள்.

08. 12. 85 இல் நடைபெற்ற 8 கிளைகளுக்கான தேர்தலில் தற்போதைய தலைவரின் அணி அமோக வெற்றி பெற்றுள்ளது.

செங்கலடியில் கொள்ளை

மட்டக்களப்பு, டிச 22

வியாழக்கிழமை இரவு செங்கலடியில் நீர்ப்பாசனக் கட்டடத்தினுள் புகுந்த ஆயுதந் தாங்கிய கொள்ளையர், காவலாளர்களை மிரட்டி விட்டு கொள்ளை இட்டனர்.

1 தமிழ் டைப்ரைட்டர், 1 சிங்கள டைப்ரைட்டர், 2 ஆங்கில டைப்ரைட்டர்கள், 1 ரோனியோ மெஷின், 100 செமிந்து பக்கெட்டுகள், 1 மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை இந்தக் கொள்ளைக் கொள்ளையர் கொண்டு சென்றதாகப் பொலிஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயித்தியமலை கட்டட தகர்ப்பு

சேதம் ரூ. 15 லட்சம்

மட்டக்களப்பு, டிச. 22

மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியிலுள்ள அரசாங்கக் கட்டடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களினால் கட்டடம், உடைமைகள் ஆயவற்றிற்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் 15 லட்சம் ரூபா என்று கப்பற்றப்பட்ட இணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன்றன.

ஆயித்தியமலை கமநல சேவை நிலைய கட்டடம், தளபாடங்கள் ஆயவற்றிற்கான நஷ்டம் 4லட்சம் 65ஆயிரம் ரூபா எனவும் ஊழியர்களின் கவனிப்பாக கோவைகள் கட்டப்பட பல தஸ்தாவேஜுகள் இல்லை சிக்கியிட்டன என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கலாசார மண்டபக் கட்டடம் நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடம் நீர்விநியோக அலுவலகக் கட்டடம் உட்பட 7 கட்டடங்கள் தாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப்படையினர் 10 இளைஞர்களை அழைத்து சென்றனர்

மட்டக்களப்பு, டிச. 22

ஆரையம்பதியில் ஆயுதப்படையினர் கடந்த வியாழனன்று தேடுதல் நடத்தினர்.

அச்சமயம் நான்கு தமிழ் இளைஞர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரில் நடை பவனியாக வந்த ஆயுதப்படையினர், ஆறு தமிழ் இளைஞர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

வெடிவிபத்து

பம்பாய், டிச.21

பம்பாயில் இரசாயன தொழிற்சாலை ஒன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட வெடிவிபத்துக் காரணமாக ஐந்து பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் வரை காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கென்னடி போட்டியிடார்

வாஷிங்டன், டிச 21

1988–ஆம் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஜோன். எவ். கெனனடியின் சகோதரர் எட்வேர்ட் கென்னடி போட்டியிட மாட்டார்.

செனட்டர் தேர்தலில் மட்டுமே தான் போட்டியிட்டு போவதாக அவர் அறிவித்துள்ளார்.

சலஞ்சர் பயணம் ரத்தானது

நாஸா, டிச 22

நேற்று விண்ணுக்கு ஏவப்பட இருந்த சலஞ்சர் விண்கலத்தின் பயணம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது

நீரியல் இயந்திரம் ஒன்றில் கோளாறு ஏற்பட்டதே இதற்குக் காரணம்.

வெளி உலகில்

ஆப்கான் - பாக் பேச்சு இடைநிறுத்தம்

ஜெனீவா, டிச. 21

ஆப்கானிஸ்தானில் உள்ள 1 லட்சத்து 15 ஆயிரம் சோவியத் துருப்புக்களை விலக்கிக்கொள்வது சம்பந்தமான ஆப்கான்–பாக் பேச்சுக்கள் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மத்தியஸ்தம் செய்யும் ஐ. நா அதிகாரி சமரப்பித்த புதிய நான்கு அம்சத் திட்டம் ஒன்றைப் பரிசீலனை செய்யும் முகமாகவே பேச்சுக்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

1986 மார்ச் மாதத்தில் தான் மீண்டும் இப்பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

பேச்சுக்களில் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே ஐ. நா அதிகாரி இந்த நான்கு அம்சத் திட்டத்தை முன்வைத்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது.

மூன்று அந்தங்கள் ஒரு நாட்டில் இன்னொரு நாடு தலையிடக்கூடாது, சோவியத் துருப்புக்களை வாபஸ் வாங்குவது பற்றியவையே.

4 ஆவது அம்சம் பாகிஸ்தானில் உள்ள 30லட்சம் ஆப்கான் அகதிகள் தாயகம் திரும்புவது பற்றியது.

அஸாம் வெற்றி குறித்து ஹெக்டே

அஸாம், டிச. 21

அஸாம் மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுகள், நாட்டில் சமஷ்டி ஆட்சி முறை நிலைத்து இருப்பதைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இப்படி கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே கூறினார்.

அஸாம் மக்களின்வெற்றியை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்று ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தெரிவித்தார்.

126 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையின் அஸாம் கண பரிஷத் கட்சிக்கு 64 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

எய்ட்ஸ் நோய் பரப்பும் கிருமியை கண்டுபிடித்தது யார்?

பாரிஸ், டிச. 21

எய்ட்ஸ் நோயைப் பரப்பும் வைரஸ் கிருமியை முதலில் கண்டு பிடித்தது அமெரிக்கா என்று இது வரை கருதப்பட்டு வந்தது. ஆனால் அதை திருபிக்கும்படி அமெரிக்க அரசாங்கத்துக்கு இப்பொழுது சவால் விடப்பட்டு உள்ளது.

பாரிஸ் நகரைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் பாஸ்டர் இன்ஸ்டிடியூட் தான் இந்தச் சவாலை விடுத்துள்ளது.

எய்ட்ஸ் வைரஸ் கிருமியைக் கண்டுபிடித்தது பாஸ்டர் இன்ஸ்டிடியூட் என்று இன்ஸ்டிடியூட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆனால் தாங்கள் தான் எய்ட்ஸ் வைரஸ் கிருமியைக் கண்டு பிடித்தது என்று கூறி அதன் உரிமையையும் தன் பெயரில் பதிவு செய்து கொண்டு விட்டது அமெரிக்க சுகாதார அமைச்சு எய்ட்ஸ் வைரஸ் கிருமியை முதலில் கண்டு பிடித்தது அமெரிக்கா தான் என்பதை நிரூபிக்கும்படி, அமெரிக்க அரசாங்கம் மீது வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாக பாஸ்டர் இன்ஸ்டிடியூட் அறிவித்துள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டு ஆலயம் அலஹபாத்தில்

அலஹாபாத், டிச.21

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு பிரதிபலிக்கும் ஆலயம் ஒன்று அலஹாபாத்தில் நிறுவப்பட்டு வருகின்றது.

காஞ்சி காமகோடி ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியசுவாமிகள் இத்தகவலை வெளியிட்டார்.

130அடி உயரமான 3 அடுக்கு விமானம் கொண்ட இந்த ஆலயம் 1986 பெப்ருவரியில் திறந்து வைக்கப்படும்.

இந்த ஆலயத்தின் பிரணாப் பிரதிஷ்டை வைபவம் பெப்ருவரி முதல் வாரத்தில் சங்கராச்சாரிய சுவாமிகளால் நடத்தப்படும்.

இந்தியப் பணமான 50 லட்சம் ரூபாவில் சங்கர் கல்சார்ர அக்கடமி மகாராஷ்டிர, கர்நாடக, உத்தர பிரதேச மாநில அரசுகளின் உதவியுடன் இந்த ஆலயத்தை நிர்மாணித்து வருகின்றது.

பாரத நாட்டில் உள்ள எல்லா சமயங்களின் திருவுருவங்களும் இந்த ஆலயத்தில் வைக்கப்படும்.

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

ஆலய மூலஸ்தானம் வரை பாதணியுடன் செல்லுகிறார்கள் ஆயுதப்படையினர்

இந்து இளைஞர் மன்ற நிர்வாக சபை ஜனாதிபதிக்கு முறையிடும்

மட்டக்களப்பு, டிச 22

ஆயுதப்படையினர் இந்து ஆலயங்களில் மூலஸ்தானம் வரை பாதணியுடன் உட்பிரவேசிக்கிறார்கள். ஆலயங்களையும் தெய்வங்களையும் புனிதமாகக் கருதாமல் அவமரியாதை செய்கிறார்கள். இத்தகைய செயல்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சு இணைப்பு அதிகாரி ஆகியோரைக்கோருவதென மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

வீடு எரிப்பு, படுகொலை போன்ற செயல்கள் நிறுத்தப்பட்டு உயிருக்கு ஊறு ஏற்படாத வகையில் பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி, இணைப்பதிகாரி ஆகியோரைக் கோருதல்.

மாநகரசபை 4 ஆம் கந்தாயத்திலிருந்து சோலைவரி அதிகரிப்பை அமுல் செய்துள்ளது. இன்றைய சூழ்நிலை கருதி இந்த அதிகரிப்பு இடை நிறுத்தப்பட வேண்டுமென மாநகரசபை உறுப்பினர்களைக் கோருதல்.

மேற்படி தீர்மானங்களுடன் காலஞ்சென்ற இந்து மாமன்ற தலைவர் சிவகப்பிரமணியத்தின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிப்பது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஆயித்தியமலை கட்டட தகர்ப்பு

சேதம் ரூ. 15 லட்சம்

மட்டக்களப்பு, டிச. 22

மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியிலுள்ள அரசாங்கக் கட்டடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களினால் கட்டடம், உடைமைகள் ஆயவற்றிற்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் 15 லட்சம் ரூபா என்று கப்பற்றப்பட்ட இணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன்றன.

ஆயித்தியமலை கமநல சேவை நிலைய கட்டடம், தளபாடங்கள் ஆயவற்றிற்கான நஷ்டம் 4லட்சம் 65ஆயிரம் ரூபா எனவும் ஊழியர்களின் கவனிப்பாக கோவைகள் கட்டப்பட பல தஸ்தாவேஜுகள் இல்லை சிக்கியிட்டன என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கலாசார மண்டபக் கட்டடம் நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடம் நீர்விநியோக அலுவலகக் கட்டடம் உட்பட 7 கட்டடங்கள் தாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப்படையினர் 10 இளைஞர்களை அழைத்து சென்றனர்

மட்டக்களப்பு, டிச. 22

ஆரையம்பதியில் ஆயுதப்படையினர் கடந்த வியாழனன்று தேடுதல் நடத்தினர்.

அச்சமயம் நான்கு தமிழ் இளைஞர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரில் நடை பவனியாக வந்த ஆயுதப்படையினர், ஆறு

முறைசாராக் கல்வித் திட்டம் வளமான வாழ்வுக்கு வழி

வட்டுக்கோட்டை, டிச.22

முறைசாராக் கல்வித் திட்டம் வளமான வாழ்வுக்கு வழி வகுக்கின்றது.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிவியாம்பிள்ளை மேற்கண்டவாறு சொன்னார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முறைசாராக் கல்வித் திட்டக் கண்காட்சியைக் கல்விப்பணிப்பாளர் அங்குராரர்ப்பணம் செய்து வைத்தார்.

அதன் பின்னர் இடம் பெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே, கல்விப் பணிப்பாளர் மேற்கண்டகருத்தை வெளியிட்டார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. த. வேலுப்பிள்ளை தலைமை வகித்தார்.

பணிப்பாளர் மேலும் சொன்னதாவது:

வெளிநாடுகளில் ஒன்றினைந்த கிராமிய அபிவிருத்திக் திட்டங்கள் சிறப்பாக இடம் பெறுகின்றன.

முறைசாராக் கல்வித் திட்டமும் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளன.

பிரதம கல்வி அதிகாரி திரு. வெ சபாநாயகம், வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

உடை அமைத்தல் பயிற்சி நெறி ஆசிரியை செல்வி. நாகநந்தினி நன்றி கூறினார்.

மருதங்கேணி ஆஸ்பத்திரி வந்த தாய்மார் ஏமாற்றம்

காத்திருந்து வீடு திரும்பினர்

தாளையடி, டிச 22

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு சின்னமுத்து தடுப்பூசி ஏற்ற குழந்தைகளுடன் வந்த தாய்மார் கடந்த புதன்கிழமை சுமார் 4 மணித்தியாலங்கள் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு குழந்தைகளுக்கான 'கிளினிக்' நாட்களில் பல அரசினர் வைத்தியசாலை யிலிருந்து நோய் தடுப்பூசி மருந்து அனுப்பி வைக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை நண்பகல் 12 மணி அளவிலேயே நோய் தடுப்பூசி மருந்து ஏற்றுவது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சின்னமுத்து நோய்த் தடுப்பூசி மருந்து, பி.சி.ஜி. தடுப்பூசி ஆகியன ஏற்றுவதற்கு டிஸ்ரிக் வாட்டர் லரவில்லை என தெரிவிக்கப்பட்டது. இதனை அறிந்தே குழந்தைகளுடன் வந்த தாய்மார் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

ஆசிரிய இடமாற்றம் மே மாதத்தில் தான்

யாழ்ப்பாணம், டிச. 21

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் ஜனவரியில் நடைபெற மாட்டாது.

அடுத்த வருடத்திற்குரிய இடமாற்றம் மே மாதம் தான் நடைபெறும். கல்வி அமைச்சு இப்படி அறிவித்திருக்கிறது.

பதிதாக மூவாயிரம் ஆசிரியர்கள் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள்.

அதற்கு முன்னர் இடமாற்றங்களைச் செய்தால் பின்தாங்கிய பகுதிகளில் ஆசிரியர் பற்றுக்குறை ஏற்படும். இதனாலேயே வருடாந்த இடமாற்றம் மே மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

பெண்ணிடம் போதை வஸ்து

கொழும்பு, டிச.22

இந்தியாவில் இருந்து விமானத்தில் கட்டு நாயக்கா வந்த சிங்களப் பெண்ணொருவரிடம் இருந்து 3 லிலோ ஹரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இவரிடம் இருந்தது போலி பாஸ்போர்ட் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

உதய சங்கற்பம்

தனக்கு ஒழிந்த இன்பமாய் வாழ்வதற்கு நியமம் செய். அகல் மூ-மன ஒருமைப்பாடு கிட்டும். மன மகிழ்ச்சியும் கிடைக்கும். நியமமே இது.

– ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர்

உதயன்

இன்னாமை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15 வேது ஒழுங்கை, யாழ்ப்பாணம் 22-12-85 த. பெ. 23

தொலைபேசி: 24805, 22078

மீண்டும் நம்பி ஏமாந்த தலைவர்கள் ஆகாதீர்

தமிழருக்கு எதிரான கொடுமைகள், அநீதிகள் ஒழியும்வரை இலங்கை அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பு ஏற்படமாட்டாது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல்குழு சென்னையில் கூடி முடிவு செய்திருக்கிறதாம். தமது மாற்று யோசனைகளுக்கு இலங்கையிடம் இருந்து சாதகமான பதில் கிடைப்பதற்கு முன்னர் பேச்சுவார்த்தை எதற்கும் போவதில்லை என்றும் கூட்டணி தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கு – கிழக்கு இணைத்மாநில சுயாட்சி என்ற ஆக்குறைந்த நிலையிலிருந்து தாம் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்று கூட்டணித் தலைவர் ஒருவர் கூறியிருப்பதாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவை நல்ல முடிவுகள்.

இலங்கை இனப்பிரச்சினை—தமிழர் பிரச்சினை இழுபறிப்பட்ட விஷயமாகிவிட்டது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த எந்தப் பேச்சுவார்த்தையும் வெற்றிகண்டதில்லை.

காலத்தைக் கடத்தி, தாம் நினைத்ததைச் செய்து, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆள்வதே எல்லா அரசாங்கங்களினதும் நோக்காக இருந்திருக்கிறது. ஜே. ஆர். அரசாங்கம் இந்த விஷயத்தில் ஏனையவற்றைவிட அசகாய சூரத்தனம் மிக்கது.

1983ஆம் ஆண்டின் பின்னரும், இந்தியாவின் சமரச முயற்சியையும் தட்டிக் கழித்து, வெகு கெட்டித்தனமாகக் காலத்தைக் கடத்தி வருகிறது யு. என். பி. அரசு.

அரசியல் தீர்வு காணப்போவதாக வேஷம் போட்டு, பேச்சுவார்த்தை எனும் தந்திர வலையில் எல்லோரையும் "சூ"க் காட்டுகிறார் இலங்கையின் பெருந் தலைவர்.

1983 ஜூலையில் நடந்த இனப் படுகொலையும், களேபரமும் தமிழர் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவைத் தலையிட வைத்தது. ஆழமான பொறியில் அகப்பட்ட எலி போல அதிலிருந்து தான் விடுபட்டு விட வேண்டும் என்பது இலங்கை அரசின் நோக்கம்.

தமிழர் பிரச்சினை என்ற காட்சியிலிருந்து எப்படியாவது இந்தியாவை நீக்கிவிட்டு, தாங்கள் பழைய பல்லவியைத் தொடரலாம் என்ற நப்பாசையும் அதற்கு இல்லாமல் இருக்க முடியாது.

அந்த முயற்சியின் ஒரு கட்டமாகவே, தமிழர் விடுதலைக் கூட்டணியை கொழும்புக்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் இருப்பதாக அரசாங்கம் "நைனா"க ஒரு கதை விடுகிறது. அந்த மாய வலையில் எமது தமிழ்த் தலைவர்கள் எவரும் விழுந்து விடக்கூடாது.

போராளிகள் இது விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கூட்டணியிலுள்ளவர்கள் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை அதிகம். அந்த நம்பிக்கை நாசமானது என்று நாம் கருதவில்லை. எனினும் இவையாவது அவர்கள் எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் நடந்துகொள்ள வேணடும்.

மாவட்ட சபைப் பேச்சுவார்த்தை விஷயத்திலும், சர்வகட்சி மாநாட்டிலும் எமது தலைவர்கள் எல்லாம் ஏமாற்றப்பட்டார்கள் என்பது சரித்திரமாகிவிட்டது. அவர்கள் நம்பி ஏமாந்த தலைவர்களாகினர்.

எனவே இந்தியாவைப் புற நீங்கலாக்கி இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை எதனையும் நடத்த இணங்குவது எமது தலையில் நமக்கே நீறுபட்டியதற்குச் சமம்.

இந்தியா எப்போதும் அடக்கி ஒடுக்கப்படுபவர்களின் உரிமைகளுக்காகவும், விடுதலைப் போராட்டம் நடத்துபவர்களுக்காகவும் குரல் கொடுத்து வருவதை எவரும் அவதானிக்கலாம். நமீபியா, தென்ஆபிரிக்கா, பலஸ்தீனம் ஆகியவற்றின் விடுதலை வேட்கையை மதித்து அவற்றுக்கு சர்வதேச அரங்குகளில் ஆதரவு கொடுத்து வருவதையும் நாம் பார்க்கிறோம்.

தமிழர் பிரச்சினை விவகாரத்திலும் அப்படியான ஒரு போக்கையே இந்திய அரசு கொண்டிருக்கிறது என்பதனை அண்மையில் வெளியுறவு அமைச்சர் திரு. பகத் லோகசபையில் ஆற்றிய உரை தெட்டென எடுத்துக் காட்டுகிறது.

எனினும் எமது உரிமைகளைப் பெறுவதற்கு இந்தியாவை முழுக்க நம்பியிருக்கும் நிலைமை ஆரோக்கியமானது அல்ல. எனினும் அதன் மத்தியஸ்தத்தையும், நல்லெண்ணத்தையும் தவிர்த்து நாம் தனிவழி போகப் பார்த்தால் அது இலங்கை அரசாங்கத்துக்கு நாமே இரை போடுவதாக முடியும்.

இலங்கை அரசாங்கத்துடன் நேரடியாகப் பேசவோ அல்லது கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தவோ விருப்பம் கொள்ளலாமா? அவ்வாறாயின் அது வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியைப் போட்டு உடைத்தது போலாகி விடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இவ் விஷயத்தில் தமது இப்போதைய போக்கை மாற்றிவிடக்கூடாது.

★ திருவருகைக்கால ஞாயிறு சிந்தனை

அன்பின் உயிரோட்டமுள்ள சமுதாயம் உருவாகட்டும்

நான் மனித தொழிற்சாலையிலே பத்தோடு பதினொன்றாக வார்த்து எடுக்கப்படும் ஒரு ஜடப்பொருளல்ல. நான் ஒரு தனிப்பிறவி. என்னைத் தவிர வேறோ 'நான்' இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை.

இத்தகைய அபூர்வராகத்திலே இரைக்கப்பட்டவன் நான். இத்தகு தனித்தன்மையிலே உன்னையே நான் ஏற்றுக் கொள்ளும் பொழுதுதான் நான் என்னை அன்பு செய்கின்றேன். இத்தனித்தன்மையிலே என்னை உருவாக்கிய இறைவனிலே தனிப் பாசத்தோடு விசுவாசம் கொள்ளும் பொழுதுதான் நான் இறைவனை அன்பு செய்கின்றேன்.

எதனுடைய இடத்தில் நின்று எனக்காக வேறு எவருமே அன்பு செய்ய முடியாது. இறைவன் உருவாக்கிய மனிதனையும் அவனவன் தனித்தன்மையிலே அரவணைக்கும் பொழுது நான் அவனை அன்பு செய்கின்றேன். அவனை அணுக்காக அன்பு செய்கின்றேன்.

இம்மூன்று அன்புகளும் சமுதாயத்திலே முழுமையாக சங்கமமாகும். அந்த நாளை இவ்வுலகிலே உருவாக்குவது தான் இயேசு பெருமானின் இடையே மாகும்.

ஞானக்கதிர்

இந்த அன்புசுளுக்கிடையே நிலவ வேண்டிய உயிரோட்டம் எங்கு எந்நிலையிலே துண்டிக்கப்பட்டாலும் அத் துண்டிப்பே பாவம் ஆகும்.

பாவத்தால் விளைகின்றவைதான் அக்கிரமங்களும், அடக்குமுறைகளும், ஆயுதக்குவிப்புகளும், ஆக்கிரமிப்புகளும், ஏற்றத்தாழ்வுகளும், இழிவான கொடுமைகளும் – பாவம் ஒழிக்கப்படவேண்டுமென்பதும், அன்பின் உயிரோட்டமுள்ள சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்பதும் ஒன்றுதான்.

எல்லாக் கோணங்களிலும், எல்லாநிலைகளிலும், எல்லாத்துறைகளிலும் அடிபட்டு மிளவுண்டு கறைபடிந்த இன்றைய மனித சமுதாயத்தை மாசுமறுவற்ற அன்பின் சமுதாயமாக உருவாக்க இயேசு பெருமான் திட்டமிட்டுச் செயல்படுகின்றார்.

அத்திட்டம் உறுதியாய் நிறைவு பெறும் என்பதற்கு அவரது உயிர்ப்பே இணையற்ற ஆதாரமாகும். இத் திட்டத்தின் நிறைவு நோக்கியே இன்றைய மனித சமுதாயம் தயாரிக்கப்படுகின்றது.

அவ்வாறு மனித சமுதாயத்தைத் தயார் செய்யவந்த ஆயிரமாயிரம் தூதுவர்களிலே ஒருவராகத்தான் புனித ஸ்நாபக அருளப்பர் தோன்றினார்.

இதோ என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன். அவர் உம் வழியை சீர்படுத்துவார். (மாற் 1:2)

ஆனால் அன்றைய நாகரிக உலகிற்கு அவர் ஒரு காட்டு மனிதர். மெல்லிசையும், இன்னிசையும் கேட்டுக் களித்த சமுதாயத்திற்கு அவர் ஒரு பாலைவன வரட்டுக்குரல். உண்டும், குடித்தும், உடுத்தியும் காலம்களித்த சொகுசு வாழ்க்கை மந்திரியிலே அவர் ஓர் அரைப் பைத்தியம்.

இயேசு பெருமானின் திட்டப்படி மனித இனம் உருவாக்கப் பெற வேண்டுமானால் அது ஆண்டவனின் வழியிலேயே நடக்க வேண்டும். அந்த வழி எல்லா மனிதர்களுக்கும் பொதுவான வழி. அது உண்மையின், அன்பின், நீதியின் வழி. அது ஒன்றே மனித சமுதாயத்தை மீட்புக்கு, விடுதலைக்கு, மகிழ்வுக்கு இட்டுச் செல்லும் வழி.

இயேசு பெருமானின் தொண்டர்களின் கூட்டமாகிய திருச்சபையின் இன்றைய குமுறல் புனித ஸ்நாபக அருளப்பரின் பாலைவனக் குரலாகவே இருக்க வேண்டும். அக்குரல் வல்லரசுகளின் செவிப்பறைகளைத் தாக்க முடியாதிருக்கலாம். அநீதர்களை அசைக்க இயலாதிருக்கலாம். அடக்கு முறைகளைக் கவிழ்த்து விடத் திறனில்லாது இருக்கலாம். நீதிக்குக் குரல் கொடுத்த ஸ்நாபக அருளப்பரின் தலை பந்தாடப்பட்டது. அன்பு தூது விடுத்து வந்த இருத்தந்தையின் நெஞ்சத்தைத் துப்பாக்கிச் குடு பதம் பார்த்தது.

திருச்சபையின் நெஞ்சம் இன்னும் எத்தனையாயிரம் துப்பாக்கித்தூள்களைத் தாங்கவேண்டியிருந்தாலும் அது அநீதியை எதிர்த்து நின்று, மனித சமுதாயத்தை அன்பின்சங்கமம் நோக்கி இட்டுச் செல்லும் ஆண்டவன்வழியிலே நடத்திச் செல்ல வேண்டும்.

பொய்யாமொழி

குறள்:

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

பொருள்:

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

சுடர் நடுவிலே

வட்டுக்கோட்டை டிச.22

வட்டுக் கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாதர் சிவன்தேவஸ்தானத்தில் திருவெம்பாவைப்பூஜைமிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

இதனையொட்டி இங்கு திருவாதவூரடிகள் புராணபடலம் நடைபெற்று வருகிறது.

இவ் வைபவத்தில் பெரும்பக்தர்கள் கலந்து கொண்டு பயன் பெற்று வருகின்றனர்.

இத் தேவஸ்தானத்தில் 7-ஆம் பூஜை நிகழ்வு 21-12-1985 நடைபெறும் சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.

★

யாழ்ப்பாணம், டிச. 22

புங்குடுதீவு மத்தி அரசடி ஸ்ரீ ஆதி வைரவர் ஆலயத்தில் திருவெம்பாவை பூஜை வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

புங்குடுதீவு திவ்ய ஜீவன சங்கத்தினரின் பஜனை ஊர்வலமும் இவ்வாண்டு ஆரம்பமாகியுள்ளது.

புங்குடுதீவு தெற்கு பெருந்துறை சமாஜ சிவன் ஆலயத்தின் திருவெம்பாவை பூஜைகள் நடைபெறுகின்றன.

அடிபணியாது வாழ உற்பத்தி அவசியம்

மரம் நடு விழாவில் மில்க்வைற் அதிபர்

யாழ்ப்பாணம், டிச.22

நாம் எவருக்கும் அடிபணியாமல் வாழ வேண்டுமானால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும். இந்நாட்டை அந்நியர்கள் ஆக்கிரமித்த போது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது வன்னி நாடு கை கொடுத்ததால் நாம் எவருக்கும் அடிபணியாது வாழ்ந்தோம்.

இவ்வாறு மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் திரு. க. கணகராசா ஊரெழுப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவில் நடைபெற்ற மரம் நடும் விழாவில் கூறினார்.

விழா ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய பூஜை ஆராதனைகளுடன் ஊரெழுப்பயிர்ச்செய்கைத் தலைமையகத்தர் திரு. சி சக்திகிரிவன் தலைமையில் நடைபெற்றது திரு. க. கணகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

இன்று எமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

இதிலிருந்து நாம்மீட்சி பெற வேண்டுமானால் செம்மண்ணுள்ள பிரதேசத்தில் விடுகள், தொழிற்சாலைகள் கட்டப்படுவதை நிறுத்தவேண்டும். செம்மண் பிரதேசத்திலும் சிறந்த முறையில் பயிர்ச் செய்கை நடைபெறவேண்டும்.

இதற்கு வேண்டிய நீர் வளத்தைப் பெருக்குவதற்கு மழைநீர் கடலுக்கு செல்வதை தடுத்து நிறுத்தி குளங்களும் ஆறுகளும் புதுப்பிக்கப்படு நீரை அவற்றில் சேகரிக்க வேண்டும் இப்படி அவர் கூறினார்.

மக்கள் முகம்

ஓய்வு பெற்றார்

பருத்தித்துறை ,டிச22

வல்வெட்டி இந்து தமிழக்கலவன் பாடசாலையில் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. கணேசமூர்த்தி கடந்த மாதம் முதல் சேவையிலிருந்து இளைப்பாறினார்.

35 ஆண்டுக் காலம் ஆசிரிய சேவையாற்றிய இவர் கரவெட்டி மெற்கு ஆசிரியத்தந்தை சுசிற்றம்பலத்தின் சிரேஷ்ட புதல்வராவர்.

இவர் ஆரம்பக் கல்வியைக் கரவெட்டி மானிக்கவாசகர் வித்தியாலயத்தில் கற்று, பின்னர் சென்னைப் பல்கலைக் கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வி பயின்று பி. எஸ். சி. பட்டதாரி யானார்.

ஆறாம்பத்தில் கண்டி மாவட்டத்தில் கணித விஞ்ஞான உதவி ஆசிரியராக நியமனம்பெற்ற இவர் அம்மாவட்டத்தில் பல பாடசாலைகளில் கடமையாற்றிய பின்னர் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றார்.

வாழைச்சேனை ஆலை ஊழியர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, டிச22

வாழைச்சேனை காகித ஆலையில் கொடர்ந்து ஏற்பட்ட கொள்கைகளால் காகித ஆலை மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இங்கு கடமையாற்றும் 90 சதவீதமான தமிழர்கள் வேலை வாய்ப்பை இழப்பார்கள் இத்தகைய சூழ்நிலையை தடுக்க கொள்ளை அடிக்கப்பட்ட சகல பொருள்களும் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் "கண்ணீர் கலந்த வேண்டுகோள்" என்னும் தலைப்பில் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

நாராயணா எனும் நாமம்

இன்று வைகுண்ட ஏகாதசி
இதனையொட்டி இப்பாடல் பிரசுரமாகிறது

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரா செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லோநான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

★

கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயினன்
உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோமானை
அமரர்க்கொல் அமுதினைக்
கண்ட கண்கள் மற்
றொன்றினைக் காணாவே.

—பெரியாழ்வார்

உணவு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் பேசுகையில், சைவதர்மம் நிலைக்க வேண்டுமானால் பயிர்ச் செய்கை செழிக்க வேண்டும் என்றார்.

கமநலச் சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் பேசுகையில் அனைத்து மக்களையும் விவசாயிகளாக மாற்றும் நோக்குடன் நடத்தப்படும் இதுபோன்ற மரம் நடும் விழாக்களை அனைத்துப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவிலும் நடத்தவேண்டும் என்றார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதர் பேசுகையில் மரங்கள் உணவுக்கு பயன்படுவதோடு நின்றுவிடாது. தெய்வீக சிந்தையை மக்கள் மனதில் ஏற்படுத்தி ஆக்கபூர்வமான நாட்டில் மிளிரச் செய்வதும் உதவுகிறது என்றார்.

விழாவில் திரு. ந. சுமுந்தை வலு, திரு. த. கிருஷ்ணராசா திரு. சு. சபாரத்தினம் திரு. வை. க. கணேஸ்வரன், திரு. சி. பாலசுப்பிரமணியம் திரு. சி கணேசு ஆகியோர் உரையாற்றினர்.

திருவெம்பாவை

நல்ல கணவர் வேண்டும் என்று கன்னியர் விண்ணப்பம்

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்
பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்
பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே யென்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப்
பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குமெனில்
என்ன குறையுமிலோம் ஏலோரெம்பாவாய்.

பொருள்

இறைவன்பழமையானவன், புதுமைக்கும்புதுமையானவன் ' இத்தகைய இணையற்ற புகழ்கொண்ட இறைவனைக் கோனாகத் தலைவனாகப் பெற்றிருக்கும் கன்னியர்களாகிய நாங்கள் அடியார்க்கு அடிமைகளாக ஆவோம் என்கிறார்கள். அவர்கள் தாம் விரும்பிய வண்ணம் சொல்வதைப் பணியாகக் கொள்வோம்; பணியே செய்வோம்' என்கின்றார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் கட்டிளம் கன்னியர்கள் 'அவர்களே எம்கணவர்கள்' என்றும் சங்கற்பம் செய்துகொள்கிறார்கள். இப்படியான பெருமையான வரங்களை மனமுவந்தருளி இறைவன் எங்களுக்கு அளித்துவிட்டால் எமக்கும் உண்டோ குறை'?. என்பது இக்கன்னியர் கருத்து.

நல்ல பண்புள்ள, நல்ல குணவியல்புகள் நிறைந்த, நல்ல தூயமனமுள்ள நல்ல கணவன்மாரைப் பெறவேண்டும் என்ற நோக்கம் பாவை நோன்பு நோற்பவர்களின் முக்கியமான இரண்டு நோக்கங்களில் ஒன்றாகும். நாடு செழிக்க மழை பெய்யவேண்டும் எனபது இரண்டாவது நோக்கம். நாடு செழித்தால்தான் நாம் வாழமாம். நாம்வாழத் தலைதான் அறம்செய்யலாம். அறம் செய்தால் குறைவில்லா நிறைவான இல்வாழ்வு இறைவன் அருள்வான்.

ஊரும் பேரும் உறவும் விசாரித்தல்

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்
முடிவே
பேதை யொருபாற் றிருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந்
துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருள்ள
கோதில் குலத்தரன்றன் கோயிற்பணிக்
பள்ளிகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏத்லனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

பொருள்

இறைவனின் திருக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு உரிமையுண்ட கன்னிப்பெண்களாய கூட்டத்தினரை நோக்கி, சிவபெருமானின் ஊர், பேர், உறவினர், அயலவர் முதலிய விவரங்கள் கேட்டார்கள் மார்கழி நீராடப்போகும் மங்கையர்கள்.

இறைவனுடைய திருவடிகளோ சொல்லின் தொடர்பைக் கடந்து பாதாளமாகிய கீழ்ஏழு உலகத்துக்கும் மேலாகச் செல்லுகின்றது. திருமுடியோ எல்லாப் பொருள்முடிவாகவும் உள்ளது. உமையை இடப்பாகத்திற்கொண்ட அர்த்த நாரீஸ்வரத் திருமேனி ஒன்றுதான் இறைவனுக்குகியது என்பதில்லை. வேதத்தின் உட்பொருளை முதலாகக் கொண்டு விண்ணும் மண்ணும் துதித்தாலும் அங்ஙனம் துதிக்கு ஒதுகின்ற அந்தப் புகழ்ச்செயைக் கடந்து நிற்பது இறைவன் திருமேனியின் எண்ணிக்கை எல்லாம்.

எனினும் அந்த இறைவன் கொண்டர்களின் உள்ளத்தில் கோயில் கொண்டிருக்கின்றான். 'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' அல்லவா? என்றெல்லாம் கன்னியர்கள் கோயிற்பணி புரியும் பெண்களை நோக்கிச் சொல்லுகிறார்கள்.

அகன்றிறகு அந்த அழகுநிறந்த கன்னியர்கள் இத்தகைய பெருமைக்க இணையற்ற இறைவனுக்கு வார் உண்டோ? பேர் உண்டோ? உற்றார் உளரோ? அயலவர்களும் உண்டோ? அவ்வாறான இறைவனுக்கு உற்றாரும் அயலவர்களும் என்றுமிலாமலிருக்க முடியுமா? அவனியாடும் தன்மைதான் யாது? என்றெல்லாம் கேள்வித்கணைகளைத் தொடுக்கின்றார்கள்

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
WEEKEND-COURSE (6 Months)
BASIC LANGUAGE
ஆரம்பம்: 25 - 1 - 86
கட்டணம், ரூ. 1500/-
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத PRACTICALS
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

இதயன்
22-12-85

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
WEEKEND-COURSE (6 Months)
BASIC LANGUAGE
ஆரம்பம்- 25 - 1 - 86
கட்டணம்: ரூ. 1500/-
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத PRACTICALS
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்திய பாதுகாப்புடன் சம்பந்தம்

நியூயோர்க் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி திவாரி உரை

நியூயோர்க், டிச. 21

இலங்கைத் தமிழரின் பிரச்சினை இந்தியாவின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது.

காரணம் இலங்கையில் வெளிநாட்டு ஏஜெண்டுகள் இயங்குவதே.

இ. நா அரசியல் குழுவில் இந்திய அரசின் பிரதிநிதியாகப் பங்கு பற்றிய பேராசிரியர் கே. கே. திவாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழ்ச் சங்கம் டிசம்பர் 14,ஆம், 15,ஆம் திகதிகளில் நியூயோர்க்கில் ஸ்டட்டன் தீவில் நடத்திய பொதுக் கூட்டம் ஒன்றில் பேராசிரியர் திவாரி முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்பொழுதே திவாரி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய ஏனைய தமிழ்ப்பிரமுகர்கள் விவரம் வருமாறு;

திரு. சார்ல்ஸ் (தமிழ் ஈழ விடுதலை இயக்கம்), திரு சங்கர் ராஜ் (ஈழப் புரட்சிகர அமைப்பு), திரு. கமல், பாஸ்ரன் (தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம்), திரு ஈழ வேந்தன் (ஈழ தேசிய விடுதலை முன்னணி), ஈழ மக்கள் புரட்கர விடுதலை முன்னணி), திரு. அ. அமிர்தலிங்கம் (கழிமூர் விடுதலைக்கூட்டணி).

பேராசிரியர் திவாரி மேலும் பேசுகையில், இந்துமாகடலில் பிராந்தியத்தில் மொசாட் ஏஜெண்டுகளை இலங்கை அரசாங்கம் நுழைத்துள்ளதை வன்மையாகக் கண்டித்தார்.

இலங்கைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் பேராசிரியர் திவாரி உறுதி அளித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் சொன்னதாவது;

தமிழர்கள் தொடர்ந்து பயமுறுத்தப்பட்டும் தாக்கப்படும் வருகின்றார்கள்.

இலங்கை அரசின் ஏஜெண்டுகளினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்திய உதவியுடன் பேச்சுவார்த்தை மூலம் இலங்கைத் சுமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது முடியாத காரியம் அல்ல - இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

சென்னையில் இருந்து சென்ற பேச்சாளர்கள் அனைவரும் தமிழின ஒற்றுமையை வலியுறுத்திப் பேசினர்.

கூட்டத்தில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கு என்று நிதி சேகரிக்கப்பட்டது

இலங்கை அரசு, சிங்கள அகதிகளை மட்டுமே பராமரிக்கின்றது என்றும் கூட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

"சிக்கிரவதை செய்வது கிரிமினல் குற்றம்"

இலங்கை அரசுக்கு 8 அம்சக் கோரிக்கை

சர்வதேச மன்னிப்புச் சபை அனுப்பியது

யாழ்ப்பாணம்,டிச 22

சித்திரவதை செய்வது ஒரு கிரிமினல் குற்றம். எக்கட்டத்திலும் சித்திரவதை செய்வது சகிக்க முடியாது என்று ஆழுக்ப்படையினருக்கு இலங்கை அரசாங்கம் பகிரங்கமான பணிப்புரை விடுக்க வேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கண்டவாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தி உள்ளது.

கடந்த சில காலங்களாக இலங்கையில் சித்திரவதைகள், துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன என்று அறிக்கைகள் கிடைத்தவதைத் தொடர்ந்து சர்வதேச மன்னிப்புச் சபை, 8 அம்சங்கள் அடங்கிய கோரிக்கையை இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது

அவை வருமாறு;

✱ சித்திரவதையை உபயோகிக்கும்படி மேலிடம் விடுக்கும் கட்டளைகளை ஏற்கக் கூடாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு பணிப்புரை விடுக்கவேண்டும்.

✱ தடுப்புக்காவலில் உள்ளவர்களை சந்திக்க சட்டத்தரணிகளுக்கும் உறவினர்களுக்கும் அனுமதி அளிக்கக் கூடியதாக பயங்கரவாதத்தடுப்புச் சட்டமும் அவசரகாச் சட்டவிதிகளும் திருத்தப்படவேண்டும்.

✱ கைதானவர்கள் எங்கே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை, அவர்களின் உறவினர்கள் சட்டத்தரணிகளுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும் அறிவிக்கப்படாமல் எவரையும் தடுப்புக்காவலில் வைக்கக் கூடாது.

✱ பாதுகாவலில் இருக்கும் போது இடம்பெறும் மரணங்கள், சித்திரவதைகள் பற்றி பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்த சுதந்திரமான அமைப்பு ஒன்றை அரசாங்கம் நிறுவவேண்டும்.

அந்த விசாரணை அமைப்பின் விசாரணை அறிக்கைகள் வெளியிடப்படவேண்டும். எல்லா மரணங்கள் குறித்தும் மரண விசாரணை நடத்தப்படவேண்டும். இந்த விசாரணைகளின் போது சாட்சிகளை ஆஜர் செய்யவும் குறுக்கு விசாரணை செய்யவும் உறவினர்களையும் சட்டத் தரணிகளையும் அனுமதிக்க வேண்டும்.

✱ விசாரணைகளின் போது சித்திரவதை செய்தது நிரூபிக்கப்பட்டால், கிரிமினல் சட்ட நடவடிக்கையும் ஒழுங்கு நடவடிக்கையும் சித்திரவதை செய்தவர்கள் மீது எடுக்கப்பட வேண்டும்.

✱ சித்திரவதை மூலம் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் அல்லது சாட்சியங்கள் சட்ட விசாரணைகளின் போது சமர்ப்பிக்கப்படக் கூடாது.

✱ பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் ஒருவரை விசாரணை செய்யும் போது, கிரேஷ்ட அதிகாரி ஒருவர் சமூகமளித்திருக்கக் கூடியதாகவும், அக் காவலதில் ஒழுங்கான வைத்திய பரிசோதனைக்கு சந்தேகநபர்களை உட்படுத்தக் கூடியதாகவும் சட்டவிதிகள் கொண்டு வரப்படவேண்டும்.

✱ சுதந்திரமான விசாரணை அமைப்பு ஒன்று, தடுப்புக்காவல் கூடங்களுக்கு ஒழுங்காகச் சென்று பார்வையிட அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும்.

✱ சித்திரவதையினால் பாதிக்கப் பட்டவர்களும் அவர்களின் உறவினர்களும் நஷ்ட ஈடும் வைத்தியக் உதவிகளும் பெறுதியை உரித்துடையவர்களாகக் கருதப்பட வேண்டும்.

இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இவற்றை வலியுறுத்தி இலங்கை ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பும்படி உலகம் முழுவதிலும் மனித உரிமை அனுதாபிகளை சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டியுள்ளது.

இக்கடிதங்களின் பிரதிகள் அந்த அந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை உலக மக்களைக் கேட்டுள்ளது.

குடாநாட்டில் பரந்த.....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கட் லோஞ்சர் வெடிச் சத்தங்கள்.

மேலே கிளம்பின

இதைத் தொடர்ந்து ஈஞ்சடித் தோட்டத்தில் தரை இங்கியிருந்த இரண்டு ஹெலிகொப்டர்கள் அவசரம் அவசரமாக மேலெழும்பின. தேடுதலில் ஈடுபட்டிருந்த ஆயுதப் படையினரும் அவசரம் அவசரமாக பறந்து கொண்டிருந்த ஹெலிகொப்டர்களில் தொங்கிய ஏணிகளில் ஏறிக்கொண்டனர்.

அதன் பின்னர் வானத்தில் இருந்து சரமாரியான துப்பாக்கிச்சூடுகள் தரையை நோக்கி வரச்தொடங்கின. இச்சூடுகள் தாக்கி ஒரு ஒன்பது வயதுச் சிறுவன் உட்பட இரண்டுபேர் மரணமாகினர்கள்.

இன்னும் ஒரு நபர் படுகாயம் அடைந்தார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டார் ஆபத்தான சட்டத்தை அவர் இன்னும் தாண்டவில்லை எனவு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறின.

காயமுற்ற பெண்கள்

வானத்தில் இருந்து வந்த துப்பாக்கிச் சூடுகள் தாக்கி காயமடைந்த 3 பெண்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களின் விவரம் வருமாறு;

1. நவரெத்தினராஜா தங்கராணி, வயது 35. ஒரு குழந்தையின் தாய். மானிப்பாய் வாசி. கையிலும் மார்பிலும் குண்டு தாக்கிய காயங்கள். இயற்கைக் கடன் கழித்துவிட்டு வருகையில் இவர் காயமடைந்தார். அவரின் வீடும் சேதமடைந்தது

2. சின்னராசா சர்வேஸ்வரி, வயது 20, திருமணமாகவில்லை. கொக்குவில் மேற்கு வாசி சகோதரி வீட்டுக்குச் சென்று வீடுதிரும்புகையில் தோள்மூட்டில் வானத்தில் இருந்து வந்த குண்டு தாக்கியது.

3. செல்லத்துரை சிவபாக்கியம், வயது 60. விதவை. 5 பிள்ளைகளின் தாய். வீட்டுவாசலில் இருக்கையில் ஹெலிக் கொப்டரில் இருந்து வந்த சூடு தாக்கியது.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் எட்டாம் வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சர்வேஸ்வரிக்கு அவசர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இவர்களிடம் சங்கு வேலியில் ஒருபெண் உட்பட இரண்டு பேர் காயமடைந்தனர், காயமடைந்த மிகர் மானிப்பாயில் தவியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச்சென்றனர்.

ஆலைச் சுவர்கள் சேதம்

விமானத் தாக்குதலில் வேலுப்பிள்ளை கந்தசாமி என்பவருக்குச் சொந்தமான அரிசி ஆலையின் சுவர்கள் சேதமடைந்தன. கட்டடத் துண்டுகள் பெயர்ந்து விழுந்து சேதம் அடைந்தது.

சுது மலையில் சின்னத்தம்பி சுந்தரலிங்கம் என்பவரின் வீட்டையும் குண்டு தாக்கியது, வீட்டினுள் இருந்த ரூட் கேஸைக் குண்டு தாக்கியதால், உணவினால் எல்லாம் எரிந்துபோய் விட்டன.

விமானத் தாக்குதலில் இரண்டு ஆடுகள் கொல்லப்பட்டன. இரண்டு மாடுகள் குற்றுயிராகக் கிடக்கின்றன.

பலாலியில் ஒன்றைக் குண்டு தாக்கியது. அதனால் முறிந்த பலாமரம், மின்வயர்கள் மேல் விழுந்தது. அதனால் வயர்கள் அறுந்தன.

பஸ்ஸுகள், காருகள், லொறிகள் விநாயகனுக்கு முன்னால் வந்து நின்று, ஆக்கள் கால், கை கழுவி, கற்பூரம் வாங்கிக் கொளுத்தி, சுத்தி வந்து கும்பிடியிகை பக்திக் களை கொட்டும். பயணக்களை போகும்.

ஆனால் சில கடையளுக்குப் பின்னாலை போனா சாராய ஸ்டோஷனும், மாட்டிறைச்சி சாப்பாடுக்,மற்ற ரெஸ்டுரனும் பரிமாறுவினமாம் இது பலருக்குத் தெரியாது.

அதை நிற்பாட்ட நடவடிக்கை எடுக்கிறது எங்கடை சமயத்துக்கு நல்லது தான் தம்பி.

சித்தாரம்

என்ன முரளி! மெத்த வாட்டமாய் இருக்கிறாய். நல்லாக் கனச்சமாதிரி இருக்கு. எங்கேயாலேயா வாறியோ.

ஓ இண்டைக்கு எல்லாருமே நல்லாக் கலங்கியிட்டினம் மாலிப்பாய், ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம் எண்டு துடங்கி அங்காலை உடுவில், இணுவில், மருதனாமடம் எண்டு பாவி, எல்லா இடத்திலையும் ஆகாயத்திலிருந்து நெல்லே குடுகள் விழுந்தது.

சனம் என்ன செய்யிறது,எங்கேஓடுறதுஎண்டு தெரியாமல பட்டஅவதி. பாவம் வயது போனதுகளும், பெண்கள் குழந்தைகளும், பொம்பிளையளும் பட்டபாடு சொல்ல முடியாத பாடு.

இரவில மரத்திலை இருக்கிற கோழியை அமத்திப் பிடிக்கிற மாதிரி, வெள்ளனக் காத்தால விடிஞ்சதும் விடியாததுமாக மேலை வட்டம் போடத் தொடங்கி விட்டினம்.

மானிப்பாய் ஆனைக் கோட்டையில சுட்டது வட்டுக்கோட்டையில சுட்டது எண்டு கதைக்கிறமாதிரச் சத்தம். எல்லாம் ஹெலிக் கொப்டரிலை இருந்து வந்த வேட்டுச் சத்தங்கள் தான்.

சத்தத்தைக் கேட்டதும் மானிப்பாய் மட்டுமென்ன தூரத்திலை உள்ள கிராமங்களும் எல்லே கலங்கியிட்டினம்.

அங்கை எல்லாம் சொன்னா, தேடுதலுக்கு வரப் போகினம் எண்டு வந்து இறங்குவினமோ எண்டு சனங்களுக்குப் பயம்.

வானப் போக்கு வரத்து இல்லை. சனநடமாட்டமுமில்லை.எல்லாம் வெறிச்சோடிப் போட்டுது காலையில அஞ்சரை தொடக்கம் மத்தியானம் பன்னிரண்டு வரை குடாநாட்டை அடக்கிப் போன மாதிரிக் கிடந்தது. கடை கண்ணி சந்தையெல்லாம் பூட்டு.

ஒரு முறையும் இல்லாத மாதிரி ரேற்றுச் சனம் சரியாப் பதறிப் போச்சுதுகள்.

மானிப்பாய் பக்கத்திலை இருந்து யாழ்ப்பாணம் கோர்ட்டைக்கு நிரம்பி வரியிலை அங்கலை கொக்குவில் கோண்டாவிலை, இணுவிலை ஒடு மடம் வண்ணார்பண்ணை எண்டு எல்லாம் இடத்திலையும் ஒரேகூடு தானாம். ஆட்கள், ஆடு, மாடு, பன்னி, தென்னை எண்டு ஒண்டும் மிச்சமில்லை. எல்லாதிலும் குண்டு துளைத்து லடுக்கள்.

மேலேயிருந்து குண்டு போட்டதாலும் சனம் பதட்டத்தோடை கதைச்சதாலும்.

யாழ்ப்பாணத்திலை போர் தொடங்கி விட்டுதோ எண்டுகூட எல்லாச்சனமும் நினைச்சுதுகள். இனியும் கப்பிடி எத்தினை எத்தினை புதுமை" எல்லாம் நடக்குமோ ஆருக்குத் தெரியும்பாரா!

* * *

அது சரி கொஞ்சத்துக்கு முன்னால், முறிண்டுப் பிள்ளையார் கோயில் விஷயம் ஏதோ கதைச்சமாதிரிக் கிடந்தது.

கோயிலுக்கு அருகலை இருக்கிற கடையளிலை மதுரானம் மாமிசம் பரிமாறக் கூடாதெண்டு நோட்டீஸ் ஒட்டியிருக்கோ.

அது பெரிய கதை அப்பா! கடையளுக்கு முன்னாலை கற்பூரம் வைத்திலை பாக்கு, ஊதுபத்தி, தேங்காய் எண்டு பூசைப் பொருள் வைச்சுவிட்டினம். கடலை கச்சாலுக்கும் அது பேர் போன இடம் தானே.

விளையாட்டரங்கு

யாழ். கிறீன்பீல்ட் அணி 11 கோல்களால் வெற்றி

இன்று யாழ். அலி - ஊரெழு றோயல் மோதல்

— விளையாட்டு செய்தியாளர் சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், டிச. 22

கோன்டாவில் வோக்கேஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணி யோகபுரம் அண்ணா விளையாட்டுக் கழக "ஏ" அணியை 11—0 என்ற அடிப்படையில் வென்றது.

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய ஒலிபிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 போர்ட் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாகவே இது நடைபெற்றது.

யாழ் உதைபந்தாட்டலீக் அனுசரணையுடன் நடந்து வரும் இப் போட்டியில் திரு ஏ.தேவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியும் யாழ்ப்பாணம் அலி விளையாட்டுக்கழக அணியும் மோதி மோதலில் இறங்குகின்றன

இப்போட்டி இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

பொலிகண்டியில் புதிய கட்டடம்

நாகர்கோவில், டிச. 22

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கான புதிய வகுப்பறைக்கட்டடம் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தை பாடசாலை அதிபர் திரு. கே. வேலற்கொடியோன் திறந்து வைத்தார்.

முறைசாராக் கல்வி திட்ட பயிற்சியை இடையில் நிறுத்தக் கூடாது

பிரதம கல்வி அதிகாரி கூறுகிறார்

வட்டுக்கோட்டை, டிச 22

முறைசாராக் கல்வித் திட்டப் பயிற்சி நேரிகளில் கலந்து கொள்வோர் இடையில் அதனை நிறுத்தக் கூடாது. தொண்டர் நிறுவனங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள் இதனைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இப்படி பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் சொன்னார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கல்லூரி அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கு திரு. சபாநாயகம் பதிலளித்துப் பேசுகையிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. நா. க. தங்கரத்தினம் (தகுலன்) நன்றி சொன்னார்.

இனப்பிரச்சினை....

1-ம் பக்கத் தொடர்ச்சி

றன. "சார்க்" மாநாட்டிலும் பயங்கரவாதத்தை ஒழிப்பதுபற்றி ஆராயப்பட்டது.

1983 கலவரத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களாகிய அவர்கள் தொழிலிழந்தனர்.

1971 பயங்கரவாதத்தில்போது 24,000 சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு தமிழ் இளைஞராவது சுடப்படவில்லை.

பயங்கரவாதத்தை 24 மணி நேரத்தில் ஒழிக்க முடியும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறுகிறது. அது எவ்வாறு முடியும்? என்று ஜனாதிபதி கேட்டார்.

300 அடி பள்ளத்தில் பஸ் ஐவர் மரணம்

கண்டி., டிச. 22

கண்டியில் இருந்து அம்பாறைக்குச் சென்ற இ.போ.ச பஸ் ஒன்று 300 அடி பள்ளத்தில் பாய்ந்தது.

4 பயணிகள் அந்த இடத்திலேயே இறந்தனர்.

ஒரு பயணி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவுடன் மரணமாகுர்.

50 பயணிகளுடன் இந்த பஸ், கண்டியில் இருந்து 20மைல் தொலைவில் உள்ள மாடுகொட என்னு மிடத்தில் விபத்துக்குள்ளானது.

கில்லு ஒன்று கழன்றதே விபத்துக்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை மாலை விபத்து இடம்பெற்றது.

ஓரே லொறி 2 இடங்களில் கொள்ளை

மட்டக்களப்பு, டிச. 22

காதிக ஆலை நலன்புரி கூட்டுறவுச் சங்க விற்பனைப் பொருள்களுடன் சென்ற லொறி ஒன்று இரு இடங்களில் கொள்ளை அடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் உள்ள சித்தாண்டியில் இந்த லொறி முதலில் வழிமறிக்கப்பட்டு அதில் இருந்த பொருள்களில் ஒரு பகுதி கொள்ளை அடிக்கப்பட்டது.

மிகுதி பொருள்களுடன் செல்ல அனுமதிக் கப்பட்டது.

இந்த லொறி மீண்டும் மொறக்கொட்டாஞ்சேனையில் வைத்து இன்னும் ஒரு குழுவினரால் வழிமறிக்கப்பட்டு மிகுதிப் பொருள்களும் கொள்ளை அடிக்கப்பட்டன.

ஐவர் தப்பினர் டிராக்டர் கிக்கியது

மட்டக்களப்பு, டிச. 22

ஆயுதப் படையினர் எதிர்ப்படவே டிராக்டரில் வந்த ஐவர் டிராக்டரைக் கைவிட்டுத் தப்பி ஓடினர்.

டிராக்டர் ஆயுதப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் நேற்று மட்டக்களப்பு—வாழைச்சேனையில் வீதியில் செங்கலடியில் நடந்தது.

தளபாட கொள்வனவுக்கு ரூ. 20, 000

நாகர்கோவில், டிச. 22

புலோலி உப-அலுவலகநூல்நிலையத்துக்குரிய புதிய தளபாடங்களைக் கொள்வனவுசெய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 20,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு பெ. கனகசபாபதி இதனைக் கெரிவித்தார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நடராஜா உமா எக்ஸ்போர்ட் லிமிட்டெட், 307 மின்னார் நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 1-ஆம் ஒழுங்கை மின்னார் நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி: 22-12-1985